<u>நீலகிரி மாவட்ட வேளாண் வானிலை முன்னறிக்க மடல்</u>

**வெளியீடு- தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழகம், தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், உதகை.**
**& இந்திய வானிலை ஆராய்ச்சி மையம்**

**தேதி 09.08.16**

சமீபகாலத்திற்கான வானிலை அறிக்கை:-

1. சமீப காலத்தில் மாவட்டத்தில் லேசான மழை பெறப்பட்டது.

2. தட்பவெப்பம் மற்றும் காற்றின் ஈரப்பதம் - அதிகபட்ச வெப்பநிலை 16º - 19º செ. மற்றும் குறைந்த பட்ச வெப்பநிலை 10º - 11º செ. ஆக இருந்தது. காலை நேர காற்றின் ஈரப்பதம் 86-90% மற்றும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 88% - 92% இருந்தது. காற்றின் வேகம் 22-39 (கிலோ.மீ./மணிக்கு).

| வானிலை குறிப்புகள் | 10.08.16 | 11.08.16 | 12.08.16 | 13.08.16 | 14.08.16 |
|---|---|---|---|---|---|
| மழை (மி.மீ) | 0.5 | 0.5 | 2 | 2 | 1 |
| அதிகபட்ச தட்ப வெப்பம் ($^0$ செ.) | 18 | 18 | 18 | 18 | 18 |
| குறைந்தபட்ச தட்ப வெப்பம் ($^0$ செ.) | 11 | 11 | 11 | 11 | 11 |
| மேகமூட்டம் (ஒக்டா) | 7 | 7 | 7 | 7 | 7 |
| அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 86 | 86 | 86 | 86 | 86 |
| குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 90 | 90 | 90 | 90 |
| காற்றின் வேகம் (கிலோ.மீ./மணிக்கு) | 21 | 21 | 21 | 21 | 21 |
| காற்றின் திசை | 250 | 250 | 250 | 250 | 250 |

**வானிலை சார்ந்த சாகுபடி குறிப்புகள்**

- மாவட்டத்தில் லேசான மழை வரும் என எதிர் பார்க்கப்படுகிறது.
- நூற்புழு தாக்குதலை தவிர்க்க, கேரட் பயிரை தொடர்ந்து பயிரிடாமல், மாற்று பயிரை பயிரிட்டு, பயிர் சுழற்சியை மேற்கொள்வது அவசியம்.
- கோஸ் பயிரில் வேர்முடிச்சு நோயை (கென்டை நோய்) தடுக்க, ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் சூடோமோனஸ், 10 கிராம் ட்ரைகோடெர்மா மற்றும் 10 கிராம் பெசில்லோமைசிஸ் வீதம் கலந்து விதை நேர்த்தி செய்து நடலாம்.

- உருளை கிழங்கில் விதைப்பின் போதும், 30 ஆம் நாளிலும் ஏக்கருக்கு 50 கிலோ யூரியா, 266 கிலோ சூப்பர் பாஸ் பேட், 40 கிலோ பொட்டாஸ் இடுவீர்.

- *பழமரங்களின் மீது பாசி படர்வதை தடுக்க,ஒரு லிட்டர் தண்ணீரில் ஒரு கிலோ கடற்சிப்பி சுண்ணாம்பை கரைத்து மரத்தின் பட்டை மீது பூசவும்.*

- *வாழை கண்றுகள் பயிரிடும் போது கண்று ஒன்றுக்கு **10** கிலோ தொழு உரம், **250** கிராம் வேப்பம் புண்ணாக்கு, **25** கிராம் ட்ரைகோடெர்மா, **25** கிராம் சூடோமோனஸ் இட்டு நடவும்.*

பேராசிரியர் மற்றும் தலைவர்
தோட்டக்கலை ஆராய்ச்சி
நிலையம், உதகை.